Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 26

வியாழக்கிழமை 22 டிசெம்பர் 2022 மார்கழி 07 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## யாழ். மாநகரசபை 'பட்ஜெட்': 7 வாக்குகளால் தோற்கடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நேற்று வாக்கெடுப்பில் 7 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 11 வாக்குகளும், எதிராக 18 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்றுச் சபையில் முதல்வர் வி.மணிவண்ணனால் சமர்ப்பிக்கப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் வரவு -செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது வெளிநடப்புச் செய்தனர். »11

## காணி விடுவிப்பு

## அரசியல் கைதிகள் விடுதலை

# ரணில் அரசாங்கம் பச்சைக்கொடி!

### அரசதரப்புக்கும், கூட்டமைப்புக்கும் இடையிலான நேற்றைய பேச்சில் முன்னேற்றம்

**கொழும்பு, டிசெம்பர் 22**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழ்த் தரப்புகளுக்கும் இடையே நேற்று மாலை சந்திப்பு நடைபெற்றுள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் பல விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.** »11

## மழை தொடரும்

யாழ்., டிசெ.22

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே உருவாகிய தாழமுக்கம், மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்வதால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக கனமானது »10

## தமிழர் பிரச்சினையைத் தீர்க்காது அரசியல் தீர்வைப் பெறமுடியாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.22

தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசியல் தீர்வைக் காணமுடியாது. குறிப்பிட்ட காலவரையறைக்குள் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து அரசியல் தீர்வைக் காண்பதே எமது நோக்கம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க »10

## மக்கள் நலனைச் சிந்திக்காது அரசியல் ரீதியான தீர்மானம்

### யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு எதுவும் இல்லை. அனைவரது கோரிக்கைகளும் உள்வாங்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டமைக்கு அரசியல் ரீதியான தீர்மானங்களே காரணம். »11

## 6 மாதத்தின் பின்னரே உள்ளூராட்சித் தேர்தல்!

யாழ்ப்பாணம், டிசெ. 22

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இப்போது கோரப்பட்டாலும் கூட தேர்தல் ஆறு மாதங்களுக்கு பின்பே நடத்தப்படும் என்று அரசாங்கத் தரப்புகளில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

8 ஆயிரமாக இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4 ஆயிரமாக அல்லது 5 ஆயிரமாகக் குறைக்கும் நோக்கில் எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு சில »11

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## பரீட்சை நடத்தத் தவறியோர் தண்டனையுடன் மீளிணைப்பு

### பேரவை தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கு உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் பரீட்சையை ஒத்திவைத்த காரணத்துக்காக விசாரணைகள் நிறைவடையும் வரையில் இடைநிறுத்தப்பட்டிருந்த துறைத்தலைவர், மூத்த விரிவுரையாளர் மற்றும் நிர்வாக அதிகாரி ஆகியோரை பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாக தண்டனையுடன் மீளவும் சேவையில் இணைப்பதற்கு பல்கலைக்கழக பேரவை தீர்மானித்துள்ளது. »11

## ஆழியவளை கடற்கரையில் சிதிலமடைந்த சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ.22

வடமராட்சி, ஆழியவளைக் கடற்கரையில் சிதிலமடைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.


சடலத்தின் முகம் முழுவதும் சிதைவடைந்து மண்டையோடு மட்டுமே எஞ்சியுள்ளதால் சடலத்தை இனங்காண முடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-27)

### திருமலையில் இருந்து யாழ். வந்த

## இ.போ.ச. பஸ்கோர விபத்து: ஒருவர் சாவு; பலர் படுகாயம்

### பளையில் நேற்று இரவு சம்பவம்



யாழ்ப்பாணம், டிசெ.22

திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான »11

## அத்துமீறிய மீன்பிடியால் தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ.22

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று பகல்வேளை பருத்தித்துறை கடற்பரப்புக்கு அருகே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழக மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் மீனவர்களைக் கைது செய்ததுடன், அவர்களின் படகையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ள நிலையில், கடற்றொழில் மற்றும் »11

noolaham.org | aavanaham.org

அரசமைப்புப் பேரவை

# இனவாதத்தை உடைத்தெறிய கூட்டமைப்புடன் இணைவோம்!

மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 22

அரசமைப்புப் பேரவையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டால், அந்த உச்சக்கட்ட இனவாதச் செயற்பாட்டுக்கு எதிராக கூட்டமைப்புடன் இணைந்து இரட்டைக்குழல் துப்பாக்கி போன்று செயற்படுவோம் – இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

அரசமைப்புப் பேரவையில் நியமிக்கப்படவுள்ள ஏழு உறுப்பினர்களுக்கான நியமனங்களில், ஐந்து சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரும் பெயரிடப்பட்டுள்ளனர். இறுதி உறுப்பினராக ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இருக்க வேண்டும் என்பது மிகமிக நியாயமான ஒரு எதிர்பார்ப்பு. ஆனால், இதையும்கூட தட்டிப்பறிக்க உதயகம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோரின் 'உத்தர சபை' கட்சி முயல்கிறது. அந்த நியமனம் உதய கம்மன்பிலவுக்கு வழங்க வேண்டும் என அந்தக் கட்சி பிடிவாதம் பிடிக்கிறது. இது உச்சக்கட்ட பெரும்பான்மைவாதம். திருத்த முடியாத திமிர்வாதம். இதை எதிர்த்து முறியடிப்பதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், தமிழ் முற்போக்கு கூட்டணி, இரட்டை குழல் துப்பாக்கியாக இணைந்து செயற்படும்.

இந்த நியமனத்துக்காகச் சித்தார்தனின் பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிந்துரை செய்துள்ளது. அது சட்டப்படியும், அரசியல் நியாயப்படியும் சரியானது. ஆகவே அதை நாமும் ஆதரிக்கிறோம். இதையே இன்று பிரச்சினைக்கு உள்ளாக்கி, அதையும் தட்டிப்பறித்து, ஈழத்தமிழ், மலையக தமிழ் என்ற பேதமில்லாமல் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கூட அரசமைப்புப் பேரவையில் இடம்பெற முடியாத நிலைமையை இனவாதிகள் ஏற்படுத்த முயல்கிறார்கள். பெரமுனவின் கூட்டணியில் தெரிவாகிவிட்டு, அரசாங்கத்தின் எல்லாத் தவறுகளுக்கும் காரணமாகி விட்டு, இப்போது எதிர்க்கட்சி பக்கத்தில் வந்து உட்கார்ந்துள்ள உதயகம்மன்பில, விமல் வீரவன்ஸ கும்பல், இதையும் தட்டிப்பறிக்க பார்க்கிறது - என்றுள்ளது. (ம)



## சந்தைக்குள் சகதி வியாபாரிகள் அவதி

*கிளிநொச்சி பொதுச்சந்தையில் அவலம்*

கிளிநொச்சி, டிசெ. 22

கிளிநொச்சி பொதுச்சந்தைக்குள் தேங்காய் வியாபாரிகள் கூறுவிலை கோரல் மேற்கொள்ளும் இடத்தில், மழை காரணமாக நெருக்கடியைச் சந்தித்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த பகுதி மழைக்காலங்களில் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. இதனால், கொள்வனவு மற்றும் விற்பனையில் ஈடுபடும்போது பல்வேறுபட்ட சிரமங்களையும் சுகாதாரச் சீர்கேட்டையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே அதிகாரிகள் இதைக் கவனத்திலெடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-214)

## குருநாகலில் விபத்து; பெண்கள் மூவர் சாவு

கொழும்பு, டிசெ. 22

குருநாகல் - நாரம்மல வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாரம்மலவிலிருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த சிற்றூர்தி கட்டுப்பாட்டை இழந்து பேருந்து தரிப்பிடத்தில் நின்றிருந்த மூவரை மோதித்தள்ளி விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மூன்று பெண்களும் நாரம்மல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர்.

விபத்து தொடர்பில் சிற்றூர்தி சாரதி கைதுசெய்யப்பட்டுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## இதுவரை போராடியது இழப்பீட்டை பெறவல்ல

*காணாமலாக்கப்பட்டோரை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி குமுறல்*



மன்னார், டிசெ. 22

இதுவரைகாலமும் நாங்கள் போராடியது இழப்பீட்டைப் பெறுவதற்காக அல்ல. எங்களுக்கு நஷ்டஈடு தருவதற்கு நீதியமைச்சருக்கு என்ன அருகதை உள்ளது? மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள ஓ.எம்.பி. அலுவலகத்தை உடனடியாக மன்னாரில் இருந்து அகற்றவேண்டும். இல்லையெனில் நாங்கள் ஒன்றிணைந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு மன்னாரில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு இழப்பீடு வேண்டாம். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளும், பிள்ளைகளுமே எமக்கு வேண்டும். இழப்பீட்டை வழங்கி சர்வதேசத்தையும் எம்மையும் திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள்.

நாங்கள் இழப்பீட்டுக்காக இவ்வளவு காலமும் போராடவில்லை. எமது உறவுகளுக்காகவும், அத்தனை உயிர்களுக்காகவுமே நாங்கள் போராடி வருகிறோம். எமது பிள்ளைகளுக்கும், உறவுகளுக்கும் என்ன நடந்தது என்று முதலில் கூறுங்கள். ஆனால் அதை பற்றி கதைக்கிறார்கள் இல்லை - என்றார். (ச-56)



# கொக்குத்தொடுவாய் பகுதியில் நிலஅபகரிப்பு முயற்சி நிறுத்தம்

முல்லைத்தீவு, டிசெ. 22

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில், பொதுமக்களின் பூர்வீகக் காணியை அபகரிப்பதற்கு வன உயிரிகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில், அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கொக்குத்தொடுவாய் பகுதியில் உள்ள கோட்டைக்கேணி பிள்ளையார் கோவில், அம்பட்டன் வாய்க்கால், வெள்ளைக் கல்லடி, குஞ்சுக்கால்வெளி, சிவந்தா முறிப்பு உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கி 4 கிலோமீற்றர் நிலப்பரப்பை அபகரிக்க வன உயிரிகள் திணைக்களம் எடுத்த முயற்சியின் விளைவாக குறித்த பகுதி நில அளவைத் திணைக்களத்தால் அளவை செய்யப்பட்டு எல்லைக் கற்களும் நடப்பட்டன. இதையடுத்து மக்களின் பிரதிநிதிகள் அந்தப் பகுதிக்கு பொதுமக்களால் அழைக்கப்பட்டதுடன் இது தொடர்பில் போராட்டங்களும் நடத்தப்பட்டன. இதையடுத்து கரைதுறைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் காணிப்பகுதி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோர் சம்பவ இடத்துக்குப் பிரசன்னமாகினர். இதையடுத்து குறித்த பகுதிக்கு வன உயிரிகள் திணைக்களத்தினரும் நில அளவைத் திணைக்களத்தினரும் வரவழைக்கப்பட்டு குறித்த பகுதி பொதுமக்களுடையது என்பதற்குரிய உறுதி ஆவணங்கள் காண்பிக்கப்பட்டதை அடுத்து எல்லைக் கற்கள் அகற்றப்பட்டன. (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 22
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயரப்புலம் பகுதியில் கோடாவுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.
உயரப்புலம் பகுதியில் கசிப்புக் காய்ச்சி விற்பனை செய்யப்படுகின்றது என்று இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது 20 கான்களில் 20 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டதோடு கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் உயரப்புலம் பகுதியைச் சேர்ந்த 33 வயதான சந்தேகநபர் ஒருவரையும் இளவாலைப் பொலிஸார் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,125)

# கசிப்புடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 22
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புடன் இருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
மானிப்பாய் சுதுமலை அம்மன் வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது, சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த ஓட்டோவை பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டனர். அதன்போது ஓட்டோவிலிருந்து 12 லீற்றர் கசிப்பைப் பொலிஸார் கைப்பற்றினர்.
அதனையடுத்து கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 57 மற்றும் 33 வயதான இருவரை சந்தேகநபர்களாகக் கைது செய்தனர். அத்துடன் சந்தேகநபர்கள் பயணித்த ஓட்டோவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சந்தேகநபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,125)

# உலகத் தமிழ் இலக்கிய விழா மதுரை கலையரங்கில் இன்று

சென்னை, டிசெ. 22
மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் உலகத் தமிழ் இலக்கிய விழா இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை வரை மதுரை உலகத் தமிழ்ச் சங்கக் கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

தொடக்க விழா இன்று முற்பகல் 10 மணிக்கு வரவேற்புரை, தொடக்கவுரை, தலைமையுரை உள்ளிட்டவற்றைத் தொடர்ந்து "தமிழ் வளர்ச்சியில் இலங்கைத் தமிழர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பிலான சர்வதேசக் கருத்தரங்கம் 8 அமர்வுகளாக இரு நாள்களிலும் நடைபெறவுள்ளது.
அதற்கமைய இன்று வியாழக்கிழமை, முதல் அமர்வும் இரண்டாம் அமர்வும் பிற்பகல் 12 மணி முதல் 1.30 மணி வரையும் மூன்றாம், நான்காம் அமர்வுகள் பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரையும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11 மணி வரை ஐந்தாம், ஆறாம் அமர்வுகளும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை ஏழாம், எட்டாம் அமர்வுகளும் இடம்பெறவுள்ளன.
அத்துடன் இன்று பிற்பகல் 4.30 மணி முதல் மாலை 6 மணி வரை "தமிழே நீ! எங்களின்..." எனும் தலைப்பில் கவியரங்கமும் நாளை பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை "சமுதாய மாற்றத்தைச் சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா?" எனும் தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன.
இறுதியாக நாளை மாலை 4.30 மணிக்கு நிறைவு நிகழ்வுகள் இடம்பெற்று விழா நிறைவுபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
இதேவேளை விழாவுக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் சார்பில் பேராசிரியர் சன்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், கவிஞர் கு.ரஜீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-14)

# வெவ்வேறு பகுதிகளில் கசிப்புடன் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 22
காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெவ்வேறு பொலிஸ் பிரிவுகளில் 13 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் நான்கு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
புத்தூர் மேற்குப் பகுதியில் 6 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவர் அச்சுவேலிப் பொலிஸாராலும், நெல்லியடிப் பகுதியில் ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடனும் கரவெட்டிப் பகுதியில் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடனும் இரு பெண்கள் நெல்லியடி பொலிஸாராலும், கட்டுவன் பகுதியில் 5 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவர் தெல்லிப்பழைப் பொலிஸாராலும் என நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களையும் பருத்தித்துறை, மல்லாகம் நீதவான் நீதிமன்றங்களில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,125)



# நெடுங்கேணி பகுதியில் யானைகள் நடமாட்டம்!

## மக்கள் அச்சம்

வவுனியா, டிசெ. 22
புளியங்குளம் - நெடுங்கேணி பகுதிக்கு யானைகள் கூட்டம் கூட்டமாக வருகின்றமையால் அச்சத்தின் மத்தியில் வீதியால் பயணிக்க நேரிடுகின்றது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் மாலை குறித்த பகுதிக்குள் நுழைந்த யானைக்கூட்டம் சுமார் 20 நிமிடங்கள் வரையில் நடமாடிவிட்டு காட்டுக்குள் சென்றுள்ளது.
அண்மைக்காலமாக யானைகள் இவ்வாறு காட்டுக்குள்ளிருந்து அதிகளவில் வந்து வீதியோரங்களில் நடமாடுவதால் அச்சத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-110)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 54 பேரிடம் விசாரணைகள்

## ஓ.எம்.பி. அலுவலகம் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் இரு தினங்கள் முன்னெடுத்த விசாரணைகளில் 54 பேரின் முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டன என காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த 19 ஆம் திகதி மற்றும் நேற்றுமுன்தினம் 20 ஆம் திகதி ஆகிய இரு தினங்கள் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.
கடந்த 19ஆம் திகதியன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், இழப்பீடு எமக்கு வேண்டாம், நீதியான விசாரணையே தேவை என்று தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
விசாரணைக்கு போதிய ஒத்துழைப்புக் கிடைக்காததால் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் விசாரணை நடவடிக்கைகள்



அன்றைய தினம் கைவிடப்பட்டது.
இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் 20ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் 54 பேரின் முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டன.
காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு கிடைத்த 14ஆயிரத்து 988 முறைப்பாடுகளை விசாரணைக்காக மூன்று பிரிவுகளாக பிரித்து காலத்தின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் அலுவலர் ரி.யோகராஜ் தெரிவித்தார்.
இறப்பு அத்தாட்சி பத்திரத்தை வழங்குதல், கோவைகளை முடிவுறுத்தல், நட்டஈடு வழங்குதல் என்பவற்றுக்காகவே இந்த விசாரணை நடவடிக்கைகள் என்று பிழையான கருத்துகள் மக்கள் மத்தியில் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.
கடந்த 5 நாள்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 242 பேரின் முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டன என்று அலுவலகத்தின் சட்டத்துறையின் தலைவரும் சட்டத்தரணியுமான ஜே.தற்பரன் தெரிவித்தார். (ச-19)

# முல்லைத்தீவில் துனுக்காய் முதலிடம்

பிரதேசசபைகளின் செயற்பாட்டுக்கான புள்ளியிடலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச சபை முதலிடத்தை பெற்றுள்ளது.
உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களிடத்தே இந்த ஆண்டுக்கான செயற்பாட்டு புள்ளியிடல் இடம்பெறுகின்றது.
அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச சபை 618 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதனால் கிடைக்கப்பெறும் நிதி, துணுக்காய் பிரதேச மக்களின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் சபையின் அடிப்படை சேவை வழங்கலை விரிவுபடுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் என துணுக்காய் பிரதேசசபை தவிசாளர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார். (ச)

WORK VISA – UK AND CANADA
Nurse உடனடி வேலைவாய்ப்பு
தாதியர் பணியாளர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
IELTS – 5.0 இருக்க வேண்டும். மற்றும் விசா தொடர்பான ஆலோசனைகளுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும்.
Lanka Cargo Worldwide Express (DHL Parcel Service)
315, Kasthuriya Road, Jaffna. T.P: 0770385584

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பிள்ளையார் கதை

வேழமுகா உன்னருளை வேண்டிநாம் நோற்றிருந்து
மூவேழு நாளாயுனைப் போற்றினோம் - வேதவனத்
துறையுமையா கரமைந் துடையானே ஆனைமுகா
கற்பகமே கணபதியே சரண்

-முருகு





# யாழில் சிறப்புற இடம்பெற்ற ஆறுமுகநாவலர் மாநாடு!

யாழ்ப்பாணம், டிசெ. 22

நாவலர் ஆண்டிலே - ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதாரம்செய்த இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டுடனும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் சபை மற்றும் யாழ். மாநகரசபையின் சமய விவகாரக்குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டுடனும் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு இனிதே நிகழ்ந்தேறியது.

டிசெம்பர் மாதம் 14, 15, 16 17 மற்றும் 18ஆம் திகதிகளில் நாவலர் பெருமான் அவதரித்த புனித பதியிலே மாநாடு நிகழ்ந்தேறியது. நாவலர் பெருமானின் குருபூஜை நன்னாளிலே ஆரம்பமாகி பிறந்த தினநாளிலே நிறைவுகண்ட இந்த மாநாட்டு நிகழ்வுகள் நல்லூர்ப் பதியிலே நாவலர் மணிமண்டபம், நாவலர் கலாசார மண்டபம், ஶ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம் ஆகிய இடங்களிலே ஆன்மிக அரங்கு, பொது அரங்கு, ஆய்வரங்கு எனப் பல அரங்குகளாக இனிதே நிகழ்ந்தேறியது. இந்த மாநாட்டின் நிறைவு நாள் வைபவத்திலே ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்து, சமூகத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் பாங்கினைப் பாராட்டி, ஈழத்தவர்கள் மற்றும் பாரத தேசத்தவர்கள் 'நாவலர் புகழ் விருது' மற்றும் நாவலர் புகழ் விசேட கௌரவம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் இலக்கியப் பணிக்கான நாவலர் புகழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கலாநிதி ஆறு. திருமுருகனின் சமூகப் பணிகளைப் பாராட்டி, அவர் சமூகப் பணிக்கான நாவலர் புகழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். புலம்பெயர் தேசத்தில் மட்டுமன்றி ஈழதேசத்திலும் அர்ப்பணிப்பு மிக்கதும் ஆத்மார்த்தமானதுமான சமயப் பணி ஆற்றிவரும் கனடா சைவ சித்தாந்தபீட இயக்குநர், மருத்துவ கலாநிதி இ.லம்போதரன் ஆகியோர் சமயப் பணிக்கான நாவலர் புகழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அற்புதம் நிறைந்த ஓவியப் பணியால் திறம்படக் கலைப்பணி ஆற்றி வரும் உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் கலைப் பணிக்கான நாவலர் புகழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இளைய தலைமுறையின் அர்ப்பணிப்பான சேவை இந்தச் சமூகத்துக்கு எப்போதும் தேவை என்பதில் ஆர்வமும் செயலூக்கமும் காட்டி அதற்கான செயற்பாடுகளைத் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் முன்னெடுத்துவரும் அமெரிக்கா - ஹவாய் சைவ ஆதீனத்தின் சிவாயசுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நாவலர் புகழ் - விசேட கௌரவம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ம-20)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்லவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்புள்ளது.

**மிதுனம் :** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படுகிறது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** உற்சாகத்துடன் செயல்படும் நாள். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அலைச்சலும் சோர்வும் ஏற்படும். பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும். பணஉதவி கிடைக்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர் செலவுகளால் கையிருப்பு குறையக்கூடும்.


**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும்.

**மேடம்**

# 2023 புத்தாண்டு ராசிபலன்



மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை தசமி திதியில், சம நோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகரணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.

*மனசாட்சிக்கு பயந்து நடப்பவர்களே...!*

உங்கள் ராசியிலேயே 2023ஆம் ஆண்டு பிறப்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும். அவ்வப்போது சோர்வாகவும் களைப்பாகவும் காணப்படுவீர்கள். கொஞ்சம் அலைச்சல், தூக்கமின்மை, திடீர்ப் பயணங்கள், செலவுகள் வந்து செல்லும். அடிக்கடி கோபப்படுவீர்கள்.

மார்ச் 29ஆம் திகதி முதல் சனி 11 ஆம் வீடான லாப வீட்டில் அமர்வதால் புதிய பொறுப்பும் பதவியும் தேடி வரும்.

வியாபாரத்தில் புது முயற்சிகள், முதலீடுகளைத் தவிர்க்கவும்.

உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு வேறு சிலர் உரிமை கொண்டாடுவார்கள். எதிர்பார்த்த சலுகைகளும், பதவி உயர்வும் சற்று தாமதமாகும்.

உங்கள் ராசியிலேயே புத்தாண்டு பிறப்பதால், பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிவரும். அடுக்கடுக்காக செலவுகள் இருந்தாலும், அதற்கேற்ற வருமானமும் உண்டு. அவ்வப்போது உடல்நிலையையும் கவனித்துக் கொள்ளுங்கள். எந்த விஷயத்தையும் ஆழ்மனதில் போட்டு வைத்துக் கொள்ளவேண்டாம். 22.04.2023 வரை குரு ராசிக்கு 12ல் இருப்பதால் சின்னச் சின்ன செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகும். கொஞ்சம் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

23.04.2023 முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்குள்ளேயே குரு அமரப்போகிறார். எனவே, உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். வருடத் தொடக்கத்தில் சனி பகவான் உங்கள் ராசிக்கு 10ம் வீட்டில் தொடர்வதால், உங்களின் தனித்திறமைகள் வெளிப்படும். பணபலம் கூடும். புகழ், கௌரவம் வளரும்.

08.10.2023 வரை ராசிக்கு 7ல் கேதுவும், உங்கள் ராசிக்குள்ளேயே ராகுவும் நிற்பதால் மூச்சுத்திணறல், அல்சர், ரத்தசோகை வந்துசெல்லும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வரும்.

09.10.2023 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசியை விட்டு ராகு விலகி 12ம் வீட்டிலும், கேது 6ம் வீட்டிலும் தொடர்வதால் எல்லாப் பிரச்சினைகளும் ஓயும்.

இந்த 2023ஆம் ஆண்டு, கடின உழைப்பு, விடாமுயற்சியுடன்கூடிய சகிப்புத் தன்மையாலும் வெற்றி பெற வைக்கும். மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு புதிய வாய்ப்புகளை அள்ளித் தருவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

"கோபம் விஷம் குடிப்பதைப் போன்றது. ஆனால் நம்பிக்கை உங்கள் எதிரிகளையும் அழிக்கும் வல்லமை மிக்கது"

– நெல்சன் மண்டேலா

## வேண்டா மருமகளின் கைபட்டால்...

வேண்டா மருமகள் கைபட்டாலும் குற்றம்: கால்பட்டாலும் குற்றம் என்ற முதுமொழியொன்று தமிழில் வழக்கில் உள்ளது. ஒருவரைப் பிடிக்கவில்லை என்பதற்காக, அவர் செய்யும் அத்தனை காரியங்களையும் முற்கற்பிதத்தோடு தவறான கண்ணோட்டத்தில் அணுகுவதோ அல்லது தவறு என்று தீர்ப்பிடுவதோ ஆகாது. அது ஓர் அபத்தமான செயல். அதைத்தான் இப்போது தனது இறுதிக்கட்ட அரசியல் யுக்தியாகக் கைக்கொண்டிருக்கின்றது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி. மாற்றுக் கருத்துக்கள் திட்டங்கள் அற்ற நிலையில், அரசாங்கம் செய்யும் அனைத்தையும் விமர்சித்தே தீருவது என்பதை, தன் அறிவிக்கப்படாத கொள்கையாகவும் வரித்துக்கொண்டுள்ளது அது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனையின் தாக்கம் தீவிரமாக அதிகரித்துவருவது ஒன்றும் பரம இரகசியம் அல்ல. உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் முதற்கொண்டு ஐஸ், கஞ்சா, மாவா என்று விதம்விதமான போதைக்கும் போதைக் கலாசாரத்துக்கும் மாணவர்கள் ஆட்பட்டு – அடிமைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தினமும் பலநூறு மாணவர்களிடம் இருந்து போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில், 'அரசாங்கம் மாணவர்களின் பைகளுக்குள் போதைப்பொருள் தேடுகின்றபோது, உணவில்லாத பெட்டிகள்தான் கிடைக்கின்றன' என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர். மாணவர்களின் உணவுப் பெட்டிகள் உணவின்றித்தான் இருக்கின்றன. ஆனால், சஜித் சொல்வதைப் போன்று போதைப்பொருள்கள் மீட்கப்படாமலில்லை.

ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும், மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும் மாணவர்களை போதைப்பொருள் கலாசாரத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் முனைப்புக் கொண்டிருப்பதை அவதானிக்கவே முடிகின்றது. அண்மையில்கூட தென்னிலங்கைப் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களில் சுமார் 70 பாடசாலைகளின் மாணவர்களிடம் இருந்து போதைப்பொருள்கள் மீட்கப்பட்டதுடன், அவர்களுக்குப் போதைப்பொருள்கள் எவ்வாறு கிடைத்தன என்ற வலைப்பின்னல் தொடர்பில் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முப்படையினரின் உதவியுடன் பாடசாலைகளில் போதைப்பொருளுக்கு எதிரான செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. பாடசாலைகளில் போதைப்பொருளை அழிப்பதற்காகச் சிறப்புச் செயலணிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான தொரு பின்னணியில், மாணவர்களுக்கும் போதைப்பொருள்களுக்கும் சம்பந்தமே இல்லையென்பதுபோல் சஜித் முன்வைத்திருக்கும் கருத்தானது பிற்போக்குத்தனமானதே.

எதிர்க்கட்சி என்றால் அனைத்து விடயங்களையும் கண்மூடித்தனமாக எதிர்க்கவேண்டும் என்று அர்த்தம் கிடையாது. ஆசிய வளர்முக நாடுகளில்தான் இந்தச் சாபக்கேட்டு மனநிலை விரவியிருக்கின்றது. அதிலும், 'கற்றறிந்தவர்களின்' சராசரியில் மேற்கத்தேயத்துக்குச் சவால் விடும் இலங்கையில், மேற்கத்தேய அரசியல் கலாசாரமும் வேரூன்ற வேண்டும். அரசாங்கத்தின் பிழையான செல்நெறியின்போது எதிர்த்து நிற்பதும், சரியான செல்நெறியின்போது தட்டிக்கொடுப்பதும்தான் எதிர்க்கட்சிகளுக்கும் அழகு – அரசியலுக்கும் அழகு. தன்னை ஒரு ஜனநாயகவாதி என்றவாறாகவும், கற்றறிந்தவர்களையும் துறைசார் வல்லுநர்களையும் உள்ளடக்கிய கூட்டணி தம்முடையது என்றவாறாகவும் காட்டிக்கொள்ளும் சஜித், இந்த குறைந்தபட்ச அரசியல் கலாசாரத்தை தன்னுள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலம் முதல் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியமைக்கும் காலம் வரை, அரசாங்கத்துக்கு எதிரான மிகப்பெரும் போராட்டங்களை நடத்துவதற்கும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் அதன் தலைமையிலான கூட்டணிக்கும் 'காப்பாளரற்ற கோல் கம்பங்கள் போன்று' வாய்ப்புக்கள் அகல விரிந்திருந்தன. இத்தனைக்கும் அறிக்கைகளை வழங்குவதையும் கண்டன உரைகளை மேற்கொள்வதையும்தான் சஜித் தனது உச்சபட்ச அரசியலாகக் கொண்டிருந்தார். இந்தப் பழங்கால அரசியலைத்தாண்டி சஜித், மக்களோடு மக்களாக வீதிக்கு இறங்கவுமில்லை, அடுத்தகட்ட ஜனநாயக செல்நெறியில் பயணிக்கத் தலைப்படவுமில்லை. இவ்வளவு ஏன், தானாகக் கிடைத்த ஆட்சிமாற்றத்தைக்கூட, சவாலை ஏற்கத் திராணியற்ற மனநிலையிலேயே அவர் மறுத்திருந்தார். இப்படியிருக்கையில் இந்த வெட்டி வீராப்புக்களையும், பகட்டுரைகளையும் சஜித் தனது அரசியலாகத் தொடர்வதானது, ஆட்சியமைக்க மட்டுமல்ல எதிரணியில் அமரக்கூட தகுதியற்ற தலைவர் என்பதையே வெளிப்படுத்துகின்றதன்றி வேறில்லை.




## போதைப்பொருள் ஒழிப்பு:
# புத்தகப்பை சோதனைக்கு பாடசாலைகளில் குழு
### கல்வியமைச்சு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 22

பாடசாலை மாணவர்களின் புத்தகப்பைகளை பரிசோதிக்கும் செயற்பாட்டுக்கென ஒவ்வொரு பாடசாலைகளிலும் குழுவொன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளடங்கவேண்டும் என கல்வியமைச்சு குறிப்பிட்டது.

போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணுதல் மற்றும் அவர்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆசிரியர்களை தெளிவுபடுத்துவதற்காக விசேட வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்கவும் பாடசாலைச் சூழலை மாணவர் நேர சூழலாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகள் பங்கேற்றனர். (ச-இ)

# பயணிகள் கப்பல் சேவைக்கு பாதுகாப்பு அமைப்பு அனுமதி

கொழும்பு, டிசெ. 22

இலங்கை - இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தப் பயணிகள் கப்பல் சேவை காங்கேசன்துறை மற்றும் பாண்டிச்சேரி இடையே முன்னெடுக்கப்படவுள்ளது. ஒரு பயணத்தின்போது 300 முதல் 400 வரையிலான பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். பயணி ஒருவரிடம் இருந்து 60 டொலருக்கு நிகரான கட்டணத்தை வசூலிக்குமாறும் முன்மொழியப்பட்டுள்ளது. (ம)

**நாளை** 23.12.2022 வெள்ளிக்கிழமை மார்கழி 08


சுபநேரம் : 06.25 - 07.55

ராகுகாலம் : 10.55 - 12.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
19
.
09
.
1957



மறைவு
18
.
12
.
2022

## சண்முகநாதன் இராஜசிங்கம்

பயிரிக்கூடல் காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் இராஜசிங்கம் அவர்கள் கடந்த (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், ஸ்ரெல்லாவின் கணவரும், சுகந்தினி (அவுஸ்திரேலியா), சுதர்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எஸ்தர் சாமந்தி, சசிகுமார் ஆகியோரின் மாமனாரும், இரத்தினசிங்கம், இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி, ஜெயசிங்கம் , விஜயசிங்கம், விஜயேஸ்வரி, தில்லைநடராசா, திலகவதி ஆகியோரின் சகோதரனும், எஸ்ரா சாமுவேல் அவர்களின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22336)1-6

# யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவன வருடாந்த விடுமுறை

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமானது நாளை மறுதினம் 24 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை வருடாந்த விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும் என்று அரச திணைக்களங்கள், மாகாண சமூக சேவைகள் திணைக்களம், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிறுவனப் பயனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வருடாந்த விடுமுறை முடிவுற்று, எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து ஜெய்ப்பூர் நிறுவனத்தின் செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெறும் என்று யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் தலைவர் மருத்துவ கலாநிதி திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார்.

(ஓ-14)


## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள்தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப்பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : **077 706 7698**

(CR 38810)(3/6)

## நிரந்தர வேலை வாய்ப்பு

யாழ்நகரில் இயங்கிவரும்
**தனியார் கல்வி நிறுவனத்திற்கு**
பின்வரும் வேலையாள்கள் தேவை

* எழுதுவினைஞர் (Clerk) பெண்
* தமிழ் தட்டெழுத்தாளர் (Typist)
* துப்புரவுப் பணியாளர்

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
- நிர்வாகி -

மேலதிக தகவல்களுக்கு : **077 248 7774**

(CR 38283) (2/6)


# மரண அறிவித்தல்

தோற்றம்
.
07
.
02
.
1939



மறைவு
.
21
.
12
.
2022

## திரு.கணபதிப்பிள்ளை துரைரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை துரைரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் நேற்று (21.12.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை (பாக்கியம்) தம்பதியரின் ஏகப்புதல்வனும், இராசையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவசுதன் (கனடா), சிவசுகுணா (யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்), சிவசுபைதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சிவசுதனி (யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேவதி (கனடா), சந்திரகாந்தன் (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி), ஸ்ரீகணேசன் (ஆசிரிய ஆலோசகர்-தென்மராட்சி வலயம்), கிரிவேல் (பொது முகாமையாளர்- அச்சுவேலி MPCS) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியந்தா (மு/சண்முகரட்ணம் வித்தியாலயம்), சுதனா (கனடா), றொபீனா (கனடா), பானுஜா, சாகித்தியன், அருள்வாரணன், ஆருத்தியன், சாருக்தியன், கோகுலன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சுரேன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அனுக்ஷயன், மாறன் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனும், நவரத்தினம், அழகரத்தினம், தியாகராஜா, விநாயகமூர்த்தி, திருஞானமூர்த்தி, சிவராஜா, தயாநிதி, பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் நேரியதூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"பாக்கியம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்: பிள்ளைகள்
0777 6666 54
077 1063 311

(CR 38841)

# மரண அறிவித்தல்

பிறப்பு
20
-
08
-
1943



இறப்பு
20
-
12
-
2022

## திருமதி பங்கையற்செல்வி வடிவேல் (பேபி)

யாழ் மண்டைதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை சிவன் கோவில் வீதியில் வசித்தவரும், மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறு, மலைமாரி வாசத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி பங்கையற்செல்வி வடிவேல் ( பேபி ) அவர்கள் 20.12.2022 செவ்வாய்க் கிழமை அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிவபூரணம் தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்ற கதிரமலை - வைத்தியர் மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரமலை வடிவேல் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், செந்தூர் வடிவேலின் (அரச மருந்தகவியலாளர்) பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற வரலட்சுமி, மற்றும் விஜயலட்சுமி (யாழ்), நவநீதகல்யாணி (கனடா), காலஞ்சென்ற வரதராஜா (ஜேர்மனி) மற்றும் நவநீதநாதன் (பாப்பா, கனடா), சிவசுதன் (சீனி, பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற அருள்நந்திதாதன் (பிரபு, ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரலிங்கம், இரத்தினவிநாயகர், செல்வக்குமார், சறோஜினி மற்றும் மீனாம்பிகை, (கனடா), சாரதாதேவி (பிரான்ஸ்), சுகுணாம்பிகை (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ( 22.12.2022 ) காலை 10.00 மணியளவில் மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
தம்பி சிவசுதன் (சீனி, பிரான்ஸ்)
0771322254

CS 22330)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல் - 2023
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை , சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் வியாபார வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குமான வேண்டுகோள்

| தொடர் இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1 | ஆதன வரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்141 முதல் 146 பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் 02.12.2016ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை சுழிபுரம். சங்கானை. வட்டுக்கோட்டை. அராலி ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>1. ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும்.<br>2. ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.<br>3. குறித்தகாலாண்டிற்குள் அக்காலப்பகுதிக்கான கட்டணம் செலுத்தத்தவறின் தண்டப்பணம் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 2 | ஆதனப் பெயர் மாற்றம் செய்தல் | எமது சபையின் எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3 | பட வரைஞர்களைப் பதிவு செய்தல் | 2023ம் ஆண்டிற்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2023ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4 | கட்டட அனுமதியும் குடிபுகு - சான்றிதழும் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள். மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டிடங்கள் மதில்கள் அமைக்கப்பட வேண்டும்.<br>2. புதிய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டடங்களுக்கு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும் அத்துடன் வீதி எல்லைக்கோட்டை பாதிக்கும் மற்றும் சுகாதாரத்திற்கு ஒவ்வாத முறையில் அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும். |
| 5 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2023 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் இதுவரை வியாபார விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்காவிடில் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை. சுழிபுரம். வட்டுக்கோட்டை. அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2023 ம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2023ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 6 | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | துவிச்சக்கர வண்டிகள். வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2023ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2023ம் ஆண்டுக்கான வாகன மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 7 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காதுவிட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | பொது சுகாதாரத் தினைப்பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்து சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள உக்காத கழிவுப் பொருட்களை மாத்திரம் தரம் பிரித்து பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 10 | வீதி ஒழுங்கைப் பேணல் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள். மரக்கறிகள். இறைச்சிகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | நீர் வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 12 | கனரக வாகன சேவை | ஏன்ஜின் றோலர் (Engine Roller) மற்றும் பைக்கோ (JCB) வாடகைக்கு தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 13 | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டியோர் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும் எற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 14 | விளம்பரங்களை அமைத்தல் காட்சிப்படுத்தல் | வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2023 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 01.02.2023ம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 15 | தரகர் முறை நீக்கம் | எமது பிரதேச சபை எல்லைக்குள் சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர்கள் வேண்டப்படுகின்றனர். |

த.நடனேந்திரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.

(CR 38820)(3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளாட்சித் தேர்தல்: நிச்சயம் வெல்வோம்!
### கூறுகிறார் ரில்வின் சில்வா


கொழும்பு, டிசெ. 22

பொதுத் தேர்தல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி என்றால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒருநாள் கிரிக்கெட் போட்டியாக மாற்றியமைத்து நிச்சயம் வெல்வோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாது தாமதப்படுத்தினால் நாங்கள் வீதியில் இறங்கி ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்ப நேரிடும். ரணிலுக்கு மறக்கமுடியாத பாடத்தை கற்பிக்க வேண்டியேற்படும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து போட்டியிட்டு வெற்றிபெறும் என பஸில் ராஜபக்ச தெரிவித்தார். பெரிய வெள்ளம் ஏற்பட்டால் பாம்பும், கீரியும் ஒன்றாக ஒரு படகில் ஏறிச் செல்லும் என்ற கதையை ஒத்ததே பஸில் ராஜபக்சவின் இந்தக் கதை - என்றார்.

(ச-இ)



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திருமதி ஹனா சிங்கர் தனது பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை சந்தித்து உரையாடினார். இதன்போது ஹனா சிங்கர் ஆற்றிய சேவை களுக்கு நன்றி தெரிவித்ததுடன் அவரது எதிர்காலப் பணிகளுக்காக ஜனாதிபதி வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

(ச-22)

# ரூபாவின் பெறுமதியில் மீண்டும் சரிவுப்போக்கு

கொழும்பு, டிசெ.22

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 371.66 ரூபாவாகவும், கொள்வனவு விலை 361.08 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினத்துடன் ஒப்பிடும்போது ஸ்டெர்லிங் பவுண்டுக்கு எதிராக ரூபாவின் மதிப்பில் சிறு உயர்வு ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் யூரோவுக்கு எதிராக ரூபாவின் பெறுமதியில் சிறு வீழ்ச்சி பதிவாகியுள்ளது. பல வெளிநாட்டு நாணயங் களுக்கு எதிராக ரூபாவின் மதிப்பு தளம்பல் நிலையில் உள்ளது. யூரோ ஒன்றின் விற்பனைப் பெறுமதி 396.47 ரூபாவாகவும், கொள்வனவுப் பெறுமதி 380.75 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. ஸ்ரேலிங் பவுண்டின் நேற்றைய விற்பனைப் பெறுமதி 453.97 ரூபாவாகவும், கொள்வனவுப் பெறுமதி 436.38 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

(எ-இ)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 09 . 08 . 1935



மறைவு 25 . 11 . 2022

கடந்த (25.11.2022) வெள்ளிக்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் ஐயம்பிள்ளை யாதவராஜன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.12.2022) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.37 / 49,**
**சேர் பொன். இராமநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs 48248) (2.6)

**குடும்பத்தினர்**
**076 671 0333**

# நாயைக் காணவில்லை

நாயின் பெயர் : றெக்சி வெள்ளையும் பிறவுண் கலர் பொம்மேரியன் 21.12.2022 புதன்கிழமை வதிரி தொடக்கம் மந்திகைக்கு இடைப்பட்ட தூரத தில் நாயைக் காணவில்லை. கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப் படும். நாயைக் கண்டால் கீழ்காணும் இலக்கத் துக்கு அழைக்கவும். **இடம் : பருத்தித்துறை**


**074 318 3770, 077131 1114**

# ஐயர் தேவை

அராலி பிரதேசத்தில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு நித்திய பூஜைகள் செய்வதற்கு பிராமண ஐயர் ஒருவர் தேவை. தங்கு மிடம் வழங்கப்படும்.

**மேலதிகமான விபரங்களிற்கு அழையுங்கள்:**
**077 896 4008**

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் சிங்கராசா (துரை)

**தோற்றம் - 12.12.1952**
**மறைவு - 21.12.2022**

தவசிகுளம் மிருசுவிலைப் பிறப் பிடமாகவும், இல. 122, கண்டி வீதி, அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிங்கராசா (துரை) நேற்று (21.12.2022) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், யசோதராதேவியின் பாசமிகு கண வரும், பொன்னுத்துரை, சரசு, காலஞ் சென்ற ரத்தினம், ராணி, காலஞ் சென்ற செல்வம், சிறி , மணி, பவளம், வவா, சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோ தரனும், மயூரன் (நீதிமன்ற உத்தியோகத்தர் மாவட்ட நீதிவான் நீதிமன்றம், கிளி நொச்சி), மயூரதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), மாதுளன் (LOLC) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சஞ்சீவா, கேதீஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அனுஷா, (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் மாம னாரும், அபினாஷ், விஸ்மிகன் (மாணவன், பரி யோவான் கல்லூரி), சுபிக்ஷா, புகழினி ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 721 6928, 077 083 1272** (CS 22331) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 09 . 1950



மறைவு 20 . 12 . 2022

## இராசரெத்தினம் பாஸ்கரன்

(முன்னாள் முகாமையாளர் - ப.நோ.கூட்டுறவுச் சங்கம் - அனலைதீவு)

யாழ். காரைநகர் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிட மாகவும் கொண்ட இராசரெத்தினம் பாஸ்கரன் 20.12.2022 அன்று சிவன்பாதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரெத்தினம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தவமணி (குமரகோட்டம்) தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபூசணியின் அன்புக் கணவரும், சிறிகரன், தர்சிகா, புவிகரன், சசிகரன், திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலதாசனின் அன்பு மாமனாரும், கஸ்மிதா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும், உமா (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரனும், சிவகுமாரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.228, ஸ்ரேசன் வீதி,**
**(சிவபூமி பாடசாலை முன்பாக)**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**
**077 768 2543, 077 288 0152**

(cs22328) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 10 - 1943



மறைவு 20 - 12 - 2022

## திருமதி தவமணி தவராசா

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் தெஹிவளை குறுக்கு வீதி, நீர்வேலி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி தவராசா 20.12.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தவராசாவின் (முன்னாள் நீதிமன்ற பதிவாளர்) அன்பு மனைவி யும், நாகரட்ணம் (சேவியர்), செல்வச்சந்திரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமைதிலி (சுவிஸ்), தவப்பிரியா (ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), திலீபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜேந்திரா (சுவிஸ்), இராகுலன் (யாழ். பல்கலைக்கழக ஊழியர்), சுதர்சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜொலிற்றா (சுவிஸ்), ஆதவன், ஆருதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குறுக்குவீதி,**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

(CS 22326) (3/6)

**தகவல்:**
**பா.இராகுலன்**
**(070 787 2828)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளிநொச்சியில் இந்தாண்டு 28 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

கிளிநொச்சி, டிசெ. 22

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 28 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதில் 16 வயதுக்குக் குறைவான 14 சிறுமியர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். குழந்தையொன்று கொலை முயற்சிக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

மேலும் 7 சிறுவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர். அதேபோன்று 7 சிறுவர்கள் மீது பாலியல் சேட்டைகள் புரியப்பட்டுள்ளன என முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் பாடசாலை மாணவன் ஒருவன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியதுடன் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்பட்ட நிலையில் சிறைவாசம் அனுபவித்து வருகிறான் எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (ச-113)

# மாணவரை நல்வழிப்படுத்துவது அனைவரதும் சமூகப் பொறுப்பே

## வலிகாமம் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

இன்றைய மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளையும் மறந்து தொலைபேசி பாவனையின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி வருகின்றனர். இதனால் கற்றலில் ஈடுபாடு காட்டுவதில்லை. தற்போது ஆறாம் தரம் முதல் கற்றல் நடவடிக்கையில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவதை அதிகளவில் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு ஏழாலை மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் நேரத்தை தொலைபேசி விளையாட்டுக்களிலும் முகப்புத்தகப் பாவனையிலும் வீண்விரயமாக்குகின்றனர்.

அதிகமான மாணவர்களின் இடைவிலகலில் தொலைபேசிப் பாவனையும், அவற்றில் தங்களை முழுதாக ஈடுபடுத்திக் கொள்ளும் செயற்பாடுகளுமே காரணமாக அமைகின்றன.

உடல், உள ஆரோக்கிய செயற்பாடுகளில் இன்றைய மாணவர்கள் ஈடுபடுவதில்லை. அதற்கு பெற்றோரே முதற் காரணமாக காணப்படுகின்றார்கள். ஒழுங்காக விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவது கூட கற்றல் நடவடிக்கை தான். எனவே இதுதொடர்பில் பெற்றோரும் ஆசிரியர்களும் கவனத்தில் எடுத்து மாணவர்களை கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும் உடல், உள செயற்பாடுகள் மீதான ஈடுபாட்டை தோற்றுவிக்கவும் வேண்டும்.

மேலும் ஆசிரியர்கள், அதிபரின் பேச்சை மாணவர்கள் கேட்கின்ற காலம் குறைந்து வருகின்றது. இது அவர்களுடைய எதிர்கால வாழ்வியலை பாதிக்கும்.

ஆகவே எதிர்கால இலக்கு பற்றிய விளக்கங்களை மாணவர்களிடத்தில் விதைத்து சிறந்த மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு பெற்றோர், ஆசிரியர்கள் அயராது உழைக்க வேண்டும் - என்றார். (ச-125)

# பெண் சாதனையாளர்களிடம் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 22

2023 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சால் பெண் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலக்கியம், கலை, விளையாட்டு, ஊடகம், தொழில் முயற்சி, இன்னும் பல துறைகள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல. 04, புளூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரி ஊடாகவோ அல்லது அ[illegible] மின்னஞ்சல் npminwa@gr[illegible] ஊடாகவோ தொடர்பு[illegible] போட்டி நுழைவுக்கான வி[illegible] மற்றும் விதிமுறைகளைப் [illegible] கொள்ள முடியும் என்று அ[illegible] பட்டுள்ளது. [illegible]

# தென்மராட்சி கர்ப்பிணிகளுக்கு 2 மாத உலருணவு விநியோகம்

சாவகச்சேரி, டிசெ. 22

தென்மராட்சி பிரதேச கர்ப்பிணிகளுக்கான ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய உலருணவுப் பொருள்கள் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விநியோகிக்கப்படுகிறது. எதிர்வரும் 28ஆம் திகதிவரை இவை விநியோகிக்கப்படும் என சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமாரன் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச கர்ப்பிணிகளுக்கு மீசாலை பழமுதிர்ச்சோலை நிலையத்திலும் கொடிகாமம் பிரதேச கர்ப்பிணிகளுக்கு சங்கத்தின் கிளைக் கடைகளிலும் கைதடிப் பிரதேச கர்ப்பிணிகளுக்கு சங்க நடமாடும் வாகனம் மூலம் நாளை வரை கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றிலிலும் இடம்பெறும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-9)

# வீதியோரத்தில் தென்னைகள்; தேங்காய்கள் விழும் அச்சம்!

## பயணிப்போர் விசனம்



யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் - உடுவில் வீதியோரத்தில் அதிகளவில் தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்து வீதியின் குறுக்கே காணப்படுகின்றன.

இதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் தேங்காய்கள் விழும் என்ற அச்சத்துடனேயே பயணிக்கவேண்டியுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் புயல், காற்று மற்றும் மழைகாலங்களில் மரங்கள் வீழ்ந்தால் போக்குவரத்து தடைப்படும் சூழலும் காணப்படுகிறது. எனவே இது[illegible] உரிய அதிகாரிகள் உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தி இந்த வீதியூடாக பாதுகாப்பான பயணத்துக்கு வழிவகுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை...

முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது. இந்தநிலைமை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை நீடிக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (அ-எ-27)

தமிழர்...

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுக்கள் சுமுகமாக ஆரம்பமாகியுள்ளன. தமிழ்த் தரப்பினரின் கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படுகின்றன. சம்பந்தன், சுமந்திரன், விக்னேஸ்வரன் போன்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் முன்வைத்த கோரிக்கைகளைப் படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த விவகாரத்துடன் தொடர்புபட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைத் தமிழ்த் தரப்பினருடன் கலந்துரையாட வழியமைத்துள்ளேன். தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசியல் தீர்வைக் காண முடியாது. எனவே, குறிப்பிட்ட காலவரையறைக்குள் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து அரசியல் தீர்வைக் காண்பதே எனது நோக்கம். பிறக்கும் புத்தாண்டு நல்லதொரு ஆண்டாக அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் ஆண்டாக அமையும் என நம்புகின்றேன்- என்றார். (அ-எ-22)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தற்காலிக வியாபார நிலையங்கள்

மன்னார், டிசெ. 22

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகைக் கால வியாபாரங்களை மேற்கொள்ள மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கேள்விப்பத்திர அடிப்படையில் தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க மன்னார் நகரசபையால் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வியாபார நிலையங்களுக்கான இடம் வழங்குவதற்கான கூட்டம் மன்னார் நகரசபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதன்போதே மன்னார் நகரசபையின் செயலாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள் முன்னிலையில் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு ஒரு வியாபார நிலையத்தை பெற்றுக்கொள்ள ஆகக்கூடிய கேள்வித் தொகைக்கு விண்ணப் பித்தவர்களுக்கு வியாபார நிலையம் அமைக்க இடம் வழங்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்துக்கான தற்காலிக இடங்களைப் பெற்றுக்கொள்ளும் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை அமைத்து எதிர்வரும் 31ஆம் திகதிவரை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். (ம-14,213)

# புலோலிப் பகுதியில் மோ.சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 22

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலி மந்திகைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கடந்த திங்கட்கிழமை திருடப்பட்டுள்ளது என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

புலோலி மந்திகைப் பகுதியிலுள்ள தோட்டத்தில் புகையிலை நாற்றுக் கன்றுகளை நடுகை செய்வதற்காக உரிமையாளர் தோட்டத்துக்குச் சென்றபொழுது, வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,125)

# கூட்டுறவுச் சங்கங்க உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், டிசெ.22

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி உற்பத்திச்சங்கங்களின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் தொழிற்றுறை திணைக்களத்தின் கீழ் உள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்திப்பொருட்களும் காட்சிப்படுத்தலும் கண்காட்சியும் மற்றும் விற்பனையும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 வரை ஆளுநர் அலுவலகம் முன்பாக இடம்பெறவுள்ளது. அங்கு உற்பத்திப்பொருட்களை மக்கள் பார்வையிட்டு கொள்வனவு செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)


கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சுவைதா ஸ்ரீகணேசா
அவர்களின் பாசமிகு தந்தையார்
கணபதிப்பிள்ளை துரைரத்தினம்
அவர்கள் நேற்று (21.12.2022) புதன்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

மரண அறிவித்தல்

குழந்தைவேல் சோதிராசா



பிறப்பு : 30.07.1939 இறப்பு : 21.12.2022

புங்குடுதீவினை அடியாகவும் கந்தர்மடத்தினை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி மாரியம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேல் சோதிராசா அவர்கள் நேற்று (21.12.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேல் தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற R.P.சிதம்பரநாதன் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குலசிந்தாமணியின் சகோதரரும், பரிமலாதேவியின் தாய் மாமனாரும், இராஜமனோ, தர்மினி (ஜேர்மன்), உத்தரதர்சினி (ஜேர்மன்), கோபிநாத் (கனடா), மயூரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமநாதன், சிவகுமாரன் (ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், நிர்மலன், அஜந்தினி, பிரியா ஆகியோரின் மாமனாரும், நிரோசன், விசாகன், துவாரகன், பகிரேகா, கோபிகா, சசிரேகா, நிதர்சன், நிதுஷா, சுதர்சன், மதீபன், சுகிர்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் கிருத்தியம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ராஜி (மகள்) - 076 863 3282
தர்மினி (மகள்) - +4915201726317
உத்திரதர்சினி (மகள்) - +4916098163304
கோபி (மகன்) - +15146604693
மயூரன் (மகன்) - 077 366 7441


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவில் மருந்துப்பொருள்கள் பெறும் நிலை

சாவகச்சேரி, டிசெ.22

மருத்துவமனைகளில் நிலவும் மருந்துப் பொருள்களின் தட்டுப்பாட்டால் வறிய நோயாளர்கள் தமது சமுர்த்திநிவாரணக்கொடுப்பனவில்மருந்துகள்பெற்றுக்கொள்ளும் அவலநிலை காணப்படுகின்றது.

சாவகச்சேரிநகரசபையின்அமர்வுநேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இதன்போது சபை உறுப்பினர் ந.திருக்குமரன் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொது அமைப்புகள் இவ்வாறான அத்தியாவசிய மருந்துகளை வாங்கி மருத்துவமனைக்கு வழங்கினால் தமக்கும்வழங்கவேண்டும்எனவும்தமக்குஇலவசமாக வழங்காவிடின் போராட்டம் நடத்துவோம் என வசதி படைத்தவர்கள் மருத்துவமனை நிர்வாகத்தினரை எச்சரிக்கின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும். புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களிடம் உதவி கள் பெற்று நோயாளர்களுக்குத் தேவையானமருந்துவகைகளைப்பெற்றுமருத்துவமனைக்கு வழங்கவேண்டும் - என்றார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட உறுப்பினர் யோ. ஜெயக்குமார், சபை உறுப்பினர்கள் 18 பேரும் தங்களால்இயன்றநிதிமூலம்வழங்கிமருத்துவமனைக்குத் தேவையானசிலஅத்தியாவசியமருந்துகளைவழங்க வேண்டும் - என்றார். (ஒ-14.9)

## மக்கள்...

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று 7 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று (நேற்று) சபை அமர்வுக்கு 36 உறுப்பினர்கள்வந்திருந்தனர். வாக்கெடுப்பு பகிரங்கமாக நடத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 18 பேரும் எதிர்த்து வாக்களித்தனர். 11 உறுப்பினர்கள்வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதுவெளிநடப்புச்செய்திருந்தனர்.

அனைவரது கருத்துக்களும் உள்வாங்கப்பட்டே வரவு - செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பாதற்கான விசேட கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்துக்கு அனைத்துஉறுப்பினர்களுக்கும்அழைப்பு விடுக்கப்பட்டது. அனைவரது கருத்துக்களும் உள்வாங்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இருவர் முன்வைத்திருந்த கோரிக்கைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இனி மேல் திருத்தங்கள் மேற்கொள்ளவதற்கு எதுவும் இல்லை. அதனால் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமைக்கு அதைக் காரணமாகக் கூறமுடியாது. அனைவரது கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்ட பின்னரும், வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளமை உறுப்பினர்களும், அரசியல் கட்சிகளும் தங்களின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு அமைய தீர்மானம் எடுத்துள்ளதையே காட்டுகின்றது. இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்தமைக்கான காரணத்தை எதிர்த்து வாக்களித்தவர்களே கூறவேண்டும்.

இந்தத் தீர்மானங்கள் மக்கள் நலன் சார்ந்து சிந்திக்காது, அரசியல் நோக்கத்துக்காக எடுக்கப்பட்ட தீர்மானம் என்றே கருதுகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் நலனுக்காக யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வரை பதவியில் இருந்து அகற்ற நினைக்கின்றது. இந்தத் தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது அரசியல் வளர்ச்சியை முன்னிறுத்தி எடுத்திருக்கலாம். ஆயினும் இது அதன் அழிவுக்கான ஆரம்பப் புள்ளியாகவும் இருக்கக் கூடும். காலம் அனைத்துக்கும் பதிலளிக்கும் என்று நினைக்கின்றேன்.

சபையில் வெறுமனே 11 உறுப்பினர்களின் ஆதரவுடனே இரண்டு ஆண்டுகளாக சபையை நடத்தி மக்களுக்கான சேவைகளைச் செய்துள்ளோம். இரண்டாவது தடவை வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டால் சபை சட்டரீதியாகக் கலைக்கப்படும். அரசாங்கம் உள்ளூராட்சிச் சபைகளைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் கூறப்படுகின்றது. நாம் எமது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் விரைவில் தீர்மானிப்போம் - என்றார். (அ-எ-125)

## 6 மாதத்தின்...

மாதங்கள் எடுக்கும் என்பதால் 6 மாதங்களுக்குத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரச தரப்பு தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

இதேவேளை - இந்தத் தேர்தலை ஓரிரு மாதங்களுக்கு ஒத்தி வைக்கவேண்டும் என்று மொட்டுக் கட்சி உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தத் தேர்தலில் பிரதானமாக 5 கூட்டணிகள் களமிறங்குவதற்குத் தீர்மானித்துள்ளன. 'மொட்டு', ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் தலைமையிலேயே இந்தக் கூட்டணிகள் உருவாகவுள்ளன. சிலவேளை, இந்தக் கூட்டணிகள் மூன்றாக மாறுவதற்கும் வாய்ப்புண்டு என்று கூறப்படுகின்றது. அதாவது மொட்டு- ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி - சுதந்திரக் கட்சி கூட்டணி ஆகியவை உருவாவதற்கு வாய்ப்புண்டு. அவ்வாறு உருவானால் கூட்டணிகள் மூன்றாக மாறும் என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-22)

## யாழ். மாநகரசபை...

45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 16 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் 13 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி. சார்பில் 10 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றனர். (அ-எ-20-27-66)

## அத்துமீறிய...

நீரியல்வளத் துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-20-27)

## பரீட்சை...

கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையை ஆராய்ந்த பின்னரே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கலைப்பீட மாணவர்களுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் பரீட்சை நடைபெறும் என்று திகதி குறிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னர் அன்றைய தினம் வினாத்தாள் தயார் செய்யப்படாததால் பரீட்சை நடைபெறவில்லை.

இது தொடர்பில் மூதவையால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பேரவையால் இருவர் கொண்ட ஆரம்பகட்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டிருந்தது. இந்த விசாரணைக்குழு கடந்த வாரம் வரை விசாரணைகளை மேற்கொண்டு பேரவைக்கு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கையின் அடிப்படையில், விடயங்களை ஆராய்ந்த பேரவை பரீட்சைக் கடமைகளில் தவறிய காரணத்துக்காக பல்கலைக்கழக நடைமுறைகளின் படி குறிப்பிட்ட காலத்துக்கு பரீட்சை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சம்பந்தப்பட்ட விரிவுரையாளர்களுக்கு தடை விதித்ததுடன், நிர்வாகப் பதவிகளில் தெரிவு செய்யப்படுவதற்கும் கருத்திற் கொள்ளக் கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்படலாம் - எனவும் பேரவை பரிந்துரைத்துள்ளது. (அ-ஒ-5)

## இ.போ.ச.பஸ்...

பயணிகள் பஸ், கிளிநொச்சி பளையில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. அதில் பயணி ஒருவர் உயிரிழந்தநிலையில், 16 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று இரவு 6 மணியளவில் பளை, முல்லையடியில் ஏ-9 வீதியில் நடந்துள்ளது. வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ், வீதியோரமாக நின்ற பனையுடன் மோதி தடம்புரண்டு சுமார் 100 மீற்றர் தூரம் வரையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

விபத்தில்காயமடைந்தவர்கள்யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், கிளிநொச்சி மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் 34 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்றும், அவரை உடனடியாக அடையாளம் காண முடியவில்லை என்றும் பளை பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர்.

அதி வேகமாகப் பயணித்தமையே விபத்துக்குக் காரணம் என்று விபத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26-23-27-113-20)

## ரணில்...

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் மட்டுமே இந்தச் சந்திப்புக்குச் சென்றிருந்தனர். இந்தச் சந்திப்பில் அரசாங்கத் தரப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அண்மையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் சாதகமான சமிக்ஞைகள் பெரும்பாலான அரசியல் கட்சிகளிடம் இருந்து கிடைத்துள்ள நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய முன்னெடுப்புக்கள் தொடர்பில் நேற்றைய சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 5ஆம் திகதி மீண்டும் ஒரு சந்திப்பை மேற்கொள்வது என்றும், அதன்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பது என்றும் இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதேநேரம், சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கைதிகளில் 5 பேரை விடுவிப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை என்றும், ஏனைய அரசியல் கைதிகள் 9 பேர் தொடர்பில் சில முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் சந்திப்பில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தரப்பில் உறுதி வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது. எதிர்வரும் 3ஆம் திகதி கூடவுள்ள தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த விடயம் பேசப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணி விடுவிப்புத் தொடர்பில் இராணுவம் சாதகமான பதிலைத் தந்துள்ளதால், தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பேசப்பட்ட பின்னர், காணிகளை எந்த அடிப்படையில் விடுவிப்பது என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, புதிய அரசமைப்புத் தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரையில் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பில் இதன்போது பேசப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்டம்

விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி

இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

2022 தொழினுட்ப மாணவர்களுக்கான

### மாபெரும் விசேட செயலமர்வு

காலம் : டிசம்பர் 23 தொடக்கம் 31 வரை @ நேரம் : 8.00 - 2.30 வரை

- 23, 24 } ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி
- 26,27,28 } தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- 29,30,31 } பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

☆ தொழினுட்பப்பிரிவின் அனைத்து மாணவர்களும் பங்கு பற்ற முடியும்.

☆ அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.

☆ எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.

☆ பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.

கையேடுகளைச் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

முற்பதிவுகளுக்கு:- ☎021 221 7860 / ✆077 248 7774

## தேவை

அனுபவமுள்ள களஞ்சியக் காப்பாளர், கூலி யாட்கள், கணினி அறிவுள்ளோர் தேவை.

இல.18, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட்.

077 77 22 215

## வீடு விற்பனைக்கு

இல.67, கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகில் 1 1/2 பரப்பு காணியில் புதிய மாடி வீடு ஒன்று விற்பனைக்கு உள்ளது.

(CS 48230) (3/6)

T.P :077 002 2685

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் வெளிநாட்டு உள் நாட்டு பொதிகள் சேவை நிறுவனத்திற்கு அலுவலக வேலைகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு எண்: 077 3866 250

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகை வியாபார நிலையத் திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**கணக்காளர் (ஆண்) :** A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**விற்பனை உதவியாளர் (ஆண்)**

சுயவிபரக்கோவையுடன் சனிக்கிழமை (24.12.2022) முற்பகல் 10.00 மணி முதல் நேரில் வரவும்

(CR 38802)(3/6)

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**

**இல.30, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

A/L 2022 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து பிரிவு மாணவர்களுக்குரிய

### விசேட செயலமர்வு

26, 27, 28 December 2022

ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல்

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
077 017 5346

(CR 38821)(3/6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 - 09 - 1950

இறப்பு 21 - 12 - 2022

### ஜெயராசா தவமணி (ராசாத்தி)

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் மற்றும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராசா தவமணி நேற்று (21.12.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சிவபாக்கியம் தம்பதி களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஜெயராசா (பொட்டுச்சாமி) அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமார், சிவதர்ஷன், சிவகௌரிதரன், சிவசங்கர், சிவசங்கரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், குமுதினி, விஜயமாலினி, மங்கையற்கரசி, ஷாளியா, தர்மரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பார்த்தீபன், தீபனா, விதுஷன், டிலக்ஷன், ஷாருஜன், மதுஷாந், ஷியாம், அகிலன், பவித்திரன், துஷிதரன், பரணிதரன், அகரன், ஹபிஷன், ஷாருதி, பாருதி ஆகியோரின் அன்பு பேர்த்தியும்,இந்திராதேவி (ஜேர்மனி), விமலாதேவி (வவுனியா), தேவராசா (சாவகச்சேரி), துரைராஜா (கனடா), இந்திரராஜா (கனடா), சரோஜாதேவி (கொழும்பு) ஆகியோரின் மைத்து னியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோவிலடி,
சாவகச்சேரி

சங்கர் (மகன்) :077 303 1972

தகவல்:
குடும்பத்தினர்

(CS 22327) (3/6)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 82 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம்**

**077 98 65 457**

**077 81 47 389**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி** பகுதியில் **30 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச் சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.